மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஃப்ரெஞ்ச் அரசாங்கத்திற்கும் இங்கிருந்த ஆங்கில அரசாங்கத்திற்கும் இடையே பம்பை ஆற்றில் அணை கட்டி கண்டமங்கலம் பகுதியை வளப்படுத்தவேண்டுமென்ற ஒரு திட்டம் சுதந்திரத்திற்கு முன்னால் இருந்தது. அதற்குப் பிறகு காங்கிரஸ் ஆராசாங்கமும் அதைப் பரிசீலனை செய்து வந்தது. தயவுசெய்து அதை இந்த அரசும் பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(9-50)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த ஏலிகுப்பம் என்பதற்கு மாதிரிமங்கலம் என்று பெயர். அதற்குத் தெற்குப் பகுதியிலே பம்பையாறு ஓடுகிறது. அதன் அருகே ஒரு அணை கட்டினால் 12 ஏரிகளுக்கு அதன் மூலமாகப் பாசனம் கொடுக்கலாம் என்றுதான் அரசு முதலில் சிந்தித்தது. அதிலே 4 ஏரிகள் பாண்டிச்சேரி மாநிலத்திற்குள் வருகின்றன. நமக்கு முன்னுரிமை தருவது குறித்து, பாண்டிச்சேரி மாநில அரசு முட்டுக்கட்டையாக இருந்து கொண்டிருக்கிறது. மீண்டும், மீண்டும் பாண்டிச்சேரி அரசாங்கத்தோடு அரசு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. பேச்சுவார்த்தை சுமுகமாகத் தீர்ந்த பிறகு இந்த அணை கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மேம்பாலம் கட்டுதல்.

*3485. திருமதி யசோதா செல்லப்பா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சையில் இருந்து மெலட்டூர் வழியாக கும்பகோணம் செல்லும் சாலையில் திட்டையின் அருகே இரயில் பாதையின் குறுக்கே உள்ள கீழ்பாலத்திற்கு பதிலாக மேம்பாலம் கட்டப்படுமா?

(ஆ) இல்லையெனில் அங்கு தேங்கும் மழை நீரை வெளியேற்ற மின்விசை பம்பு அமைக்க அரசு முன்வருமா?

1989 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. துரைமுருகன் :

(அ) மற்றும் (ஆ) மழைக் காலங்களில் தேக்கம் ஏற்படுகிற பொழுது, சாலையில் இருக்கிற நீரை வெளியேற்றிவிட்டு போக்கு வரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ளும்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1977 ஆம் ஆண்டு முன்னாள் எம்.எல்.ஏ., மறைந்த என் கணவர் இதே கேள்வியை இந்த மாமன் றத்திலே கேட்டிருக்கிறார்கள். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. மழைக் காலங்களில் அங்கு தேங்கும் நீரால், போக்கு வரத்து வாகனங்களும் பேருந்துகளும் பாதிக்கப்பட்டு போக்கு வரத்து தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஓரிடத்தில் மேம்பாலம் கட்டுவது என்றால், எவ்வளவு வாகனங் கள் போகின்றன என்ற கணக்கு எடுக்க வேண்டும். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கணக்கெடுக்கிற வேலைகளைத் துரிதப்படுத்தி இருக்கிறோம். எனவே அந்த விவரம், குறிப்பாக இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் இன்னும் வரவில்லை. ஆனால், அதே நேரத்தில் அது வரையில் போக்குவரத்து தடையில்லாமல் பார்த்துக்கொள்ள எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எடுத்துக் கொள்ளப்படும். புள்ளி விவரக் கணக்கு கிடைத்த பிறகு மேற்கொண்டு பாலம் கட்டுவது குறித்து இந்த அரசு பரிசீலிக்கும்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மிகவும் நன்றி.

இராசபாளையத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 3107. **திரு. வி. பி. இராசன் :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசபாளையத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?